# வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் (98) மறைவு

**சென்னை, செப். 28:** வேளாண் விஞ்ஞானியும், பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவருமான எம்.எஸ்.சுவாமிநாதன் (98) சென்னையில் வியாழக்கிழமை (செப்.28) காலமானார்.



எம்.எஸ்.சுவாமிநாதன்

ஆராய்ச்சிகள் வாயிலாக விளைச்சலை அதிகரித்து, விவசாயிகளின் வாழ்வில் புதிய வெளிச்சத்தை பாய்ச்சியதோடு நில்லாமல், அதன் மூலம் நாட்டின் உற்பத்தி பொருளாதாரத்தையும் உயர்த்தியதில் எம்.எஸ்.சுவாமிநாதனின் பங்கு தன்னிகரற்றது.

வயோதிகம் காரணமாக சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள வீட்டில் கடந்த சில மாதங்களாக ஓய்வில் இருந்து வந்த அவருக்கு, அண்மைக்காலமாக உடல் நலிவுற்றிருந்தது. இந்த நிலையில், வியாழக்கிழமை காலை 11.20 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது.

**வாழ்க்கைப் பயணம்:** கும்பகோணத்தில் 7.8.1925-இல் பிறந்தமான்கொம்பு சாம்பசிவன் சுவாமிநாதன் என்கிற எம்.எஸ்.சுவாமிநாதன், அங்கேயே பள்ளிப் படிப்பை நிறைவு செய்தார். அவரது தந்தை அறுவை சிகிச்சை நிபுணர் எம்.கே.சாம்பசிவன், சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் தீவிரமாக இயங்கியவர்.

தாய் பார்வதி தங்கம்மாளின் அரவணைப்பில் வளர்ந்த சுவாமிநாதனுக்கு இளம் பருவத்திலேயே வேளாண் அறிவியலில் தணியாத ஆர்வம் ஏற்பட்டது. அதன் விளைவாக திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரி, கோவை வேளாண் கல்லூரியில் இருஇளநிலைப் பட்டங்களை நிறைவு செய்தார்.

**வேளாண் புரட்சி:** 1949-இல் வேளாண் ஆராய்ச்சியைத் தொடங்கிய அவர், தனது இறுதி மூச்சுவரை அதைத் தொடர்ந்து கொண்டிருந்தார். பசிப் பிணியைத் தீர்க்க வேண்டுமென்றால் நிலையான விவசாய வளர்ச்சிதான் ஒரே மருந்து என்று கூறிய எம்.எஸ்.சுவாமிநாதன், முதல்முதலில் உருளைக் கிழங்கு, நெல், கோதுமையின் மரபணுவை ஆய்வு செய்தார்.

அதிக விளைச்சல் கொண்ட கோதுமை ரகங்களை அமெரிக்க விஞ்ஞானியும், நோபல் பரிசு பெற்றவருமான நார்மன் போர்லாக் உடன் இணைந்து கண்டறிந்தார்.

அது நாட்டில் பசுமைப் புரட்சிக்கே வித்திட்டது. அதன் தொடர்ச்சியாகவே 'பசுமைப் புரட்சியின் தந்தை'யாக எம்.எஸ்.சுவாமிநாதன் அறியப்பட்டார்.

**விருதுகள்- பொறுப்புகள்:** தேசிய, சர்வதேச வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்களிலும், ஆய்வகங்களிலும் உயர் பொறுப்புகளை அவர் வகித்துள்ளார்.

சர்வதேச இயற்கை பாதுகாப்பு அமைப்பின் தலைவராகவும் எம்.எஸ்.சுவாமிநாதன் இருந்துள்ளார். தேசிய விவசாயிகள் ஆணையம், உலக உணவுப் பாதுகாப்பு அமைப்பின் நிபுணர் குழு ஆகியவற்றின் தலைவராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

அவர் நாடாளுமன்ற உறுப்பினராக 2007-இல் அப்போதைய குடியரசுத் தலைவர் அப்துல் கலாமால் நியமிக்கப்பட்டார். 'பத்மஸ்ரீ', 'பத்மபூஷண்', 'பத்ம விபூஷண்', 'ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்', 'சாந்தி ஸ்வரூப் பட்நாகர்', 'மகசேசே', சர்வதேச உணவுப் பாதுகாப்பு விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

84 கௌரவ டாக்டர் பட்டங்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. எம்.எஸ்.சுவாமிநாதனின் மனைவி மீனா சுவாமிநாதன் கடந்த ஆண்டு காலமானார்.

உலக சுகாதார அமைப்பின் முன்னாள் தலைமை விஞ்ஞானி டாக்டர் சௌமியா சுவாமிநாதன், பொருளாதார நிபுணர் மதுரா சுவாமிநாதன், சமூக செயல்பாட்டாளர் நித்யா ராவ் ஆகிய மூன்று மகள்கள் அவருக்கு உள்ளனர்.

**அஞ்சலி:** மறைந்த சுவாமிநாதனின் உடலுக்கு முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு உள்பட முக்கியத் தலைவர்களும், பிரபலங்களும் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

**இறுதிச் சடங்கு:** பொதுமக்கள் அஞ்சலிக்காக அவரது உடல் சென்னை தரமணியில் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தில் வரும் சனிக்கிழமை (செப்.30) காலை 10 மணி வரை வைக்கப்பட்டு பின்னர் இறுதிச் சடங்குகள் நடைபெறவுள்ளன.

## விவசாயிகள் வாழ்வில் விடியல் தந்தவர்



மறைந்த வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் உடலுக்கு வியாழக்கிழமை அஞ்சலி செலுத்திய முன்னாள் குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு. உடன் எம்.எஸ்.சுவாமிநாதனின் மகளும் உலக சுகாதார அமைப்பின் முன்னாள் தலைமை விஞ்ஞானியுமான டாக்டர் சௌமியா சுவாமிநாதன் உள்ளிட்டோர்.

## தொலைநோக்குப் பார்வையுடன் உழைத்தவர்: திரௌபதி முர்மு

**குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு:** உணவுப் பாதுகாப்புக்கு தொலைநோக்குப் பார்வையுடன் ஓய்வின்றி உழைத்தவர் மறைந்த வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன்.

**குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர்:** இந்திய வேளாண் துறைக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆற்றிய மகத்தான பங்களிப்பு, நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ததோடு, லட்சக்கணக்கான விவசாயிகளின் வளமைக்கும் பங்காற்றியது.

**பிரதமர் நரேந்திர மோடி:** நமது நாட்டின் வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டத்தில், வேளாண் துறையில் அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பு கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்தது; நமது தேசத்தின் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்தது.

**தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி:** நவீன பாரதத்தைக் கட்டமைத்தவர்; அவர் எப்போதும் நம் இதயங்களில் வாழ்வார்.

## காவல் துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி: முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, செப். 28:** மறைந்த வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனை கௌரவிக்கும் வகையில் தமிழக அரசு சார்பில் காவல் துறை மரியாதையுடன் சனிக்கிழமை (செப்.30) இறுதி அஞ்சலி செலுத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

எம்.எஸ்.சுவாமிநாதனின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: நாடு போற்றும் விஞ்ஞானியாக, சுற்றுச்சூழல் மற்றும் வேளாண்மைத் துறைகளில் அளப்பரிய பங்காற்றிய எம்.எஸ்.சுவாமிநாதன், திமுக ஆட்சிக் காலங்களில் மாநிலத் திட்டக் குழுவில் இடம்பெற்று சீரிய ஆலோசனைகளை அளித்தார்.

கடந்த 1989-ஆம் ஆண்டு முதல்வராக இருந்த கருணாநிதியிடம், அவர் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் சென்னை தரமணியில் நிலம் வழங்கப்பட்டது. அந்த நிலத்தில்தான் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. அவரது மறைவு அறிவியல் துறைக்கும் தமிழ்நாட்டுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# மகாகவியின் கனவு மெய்ப்பட்டது!

[illegible]



டி.எஸ். தியாகராசன்

**ரஷ்ய அதிபர் இந்தியாவின் 'மேக் இன்' திட்டத்தையும் பிரதமர் மோடியையும் வெகுவாக புகழ்ந்து உள்ளார். இந்த ஜி-20 மாநாட்டில் ரஷ்யா- உக்ரைன் போர் குறித்தான தீர்மானத்தை ரஷ்யாவும் வரவேற்று உள்ளது. பாரதத்தின் ராஜதந்திர நடவடிக்கைகளை அமெரிக்கா பாராட்டியுள்ளது.**

[illegible]

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# எதிர்பார்த்தபடி பணியைச் செய்தது 'பிரக்யான்' ரோவர்

## இஸ்ரோ தலைவர் சோமநாத்

**வெராவல், செப்.28:** நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கி ஆராயும் வகையில் இந்தியா அனுப்பிய சந்திரயான்-3 விண்கல திட்டத்தின் 'பிரக்யான்' ரோவர் எதிர்பார்த்தபடி தனது பணியை சிறப்பாகச் செய்தது என இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைவர் எஸ்.சோமநாத் வியாழக்கிழமை தெரிவித்தார்.

குஜராத் மாநிலம் கிர் சோம்நாத் மாவட்டத்தில் உள்ள வெராவல் நகரத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது அவர் கூறியதாவது: கருந்துளை, தூசு மற்றும் வாயுக்களின் மேகக் கூட்டமான 'நெபுலா' உள்ளிட்டவற்றை ஆராயும் 'எக்ஸ்போசாட்' செயற்கைக்கோள் பிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் விண்ணில் ஏவப்படும்.

பருவநிலை குறித்து ஆராயும் 'இன்சாட்-3டிஎஸ்' செயற்கைக்கோள் டிசம்பரில் செலுத்தப்பட உள்ளது. அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா உடன் இஸ்ரோ இணைந்து உருவாக்கிய 'நிசார்' செயற்கைக்கோள், அடுத்த ஆண்டு பிப்ரவரியில் எஸ்எஸ்எல்வி டி3 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்படும்.

சந்திரயான்-3 திட்டத்தின் பிரக்யான் ரோவரை மீண்டும் தொடர்பு கொள்ளும் முயற்சி வெற்றி பெறவில்லை என்றபோதிலும், எதிர்பார்க்கப்பட்ட பணிகளை அது சிறப்பாகச் செய்து முடித்துள்ளது' என்றார்.

முன்னதாக, அந்த மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற ஜோதிர்லிங்கத் தலமான சோமநாதர் கோயிலில் வழிபட்ட இஸ்ரோ தலைவர் எஸ். சோமநாத், 'கடவுள் சோமநாதர் அருளால், நிலவில் தரையிறங்கும் கனவு வெற்றியடைந்தது. அதனால் தான் இந்த கோயிலுக்குத் வந்துள்ளேன். இஸ்ரோவின் எதிர்கால திட்டங்கள் வெற்றி பெற வேண்டுமென வழிபட்டேன்' என செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



குஜராத் மாநிலம் சோமநாத்தில் உள்ள ஜோதிர்லிங்கத் தலமான சோமநாதர் கோயிலில் வியாழக்கிழமை வழிபட்ட இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத்.

# தமிழ்நாடு சுற்றுலா வழிகாட்டி நெறிமுறைகள் பதிவு திட்டம் அறிமுகம்

**சென்னை, செப். 28:** தமிழ்நாடு சுற்றுலா வழிகாட்டி நெறிமுறைகள் பதிவு திட்டத்தை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிமுகப்படுத்திவைத்தார்.

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் - 2023 வழங்கும் விழா சென்னை கலைவாணர் அரங்கில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன், வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் பங்கேற்றனர்.

இதில், அமைச்சர் ராமச்சந்திரன் பேசியது:

தமிழகபொருளாதாரத்தைமேம்படுத்துவதில் சுற்றுலாத் துறை முக்கிய பங்காற்றும் வகையில் 'தமிழ்நாடு சுற்றுலா கொள்கை 2023 வெளியிடப்பட்டுள்ளது. இதில் சுற்றுலாவுக்கு தொழில் தகுதி கிடைக்கவும், சுற்றுலா தொழில் முனைவோருக்கு ஊக்கத்தொகை, மானியம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.



உலக சுற்றுலா தினத்தையொட்டி, சென்னை கலைவாணர் அரங்கில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலா வழிகாட்டிகளுக்கான நெறிமுறைகள் பதிவு திட்டம் -2023 கையேட்டை வெளியிட்ட அந்தத் துறையின் அமைச்சர் கா.ராமச்சந்திரன். உடன், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, செஞ்சி கே.எஸ்.மஸ்தான், சுற்றுலா, பண்பாடு, அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் க.மணிவாசன், சுற்றுலா துறை இயக்குநர் சந்தீப் நந்தூரி.

சுற்றுலா பலன்களை தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஏற்படுத்தி, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு, தொழில் முனைவோர் அதிக அளவில் உருவாக்கப்படுவார்கள். மாநில மொத்த உற்பத்தியில் குறைந்தது 12 சதவீதம் சுற்றுலாத் துறை பங்களிப்பு அளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

சுற்றுலா மற்றும் அதன் துணைத் தொழில்கள் மூலம் தமிழகத்தில் 25 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். தமிழ்நாட்டுக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த முறையில் சுற்றுலாத் தலங்களின் சிறப்புகளை எடுத்து இயம்பும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வழிகாட்டி நெறிமுறைகள் பதிவு திட்டம்-2023 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தருவோருக்கு சிறந்த சேவையை வழங்குவதை ஊக்குவிக்கும் வகையில் சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டை உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான இடமாக உருவாக்க வேண்டும் என்றார் அவர்.

முன்னதாக, சுற்றுலாத் துறையில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் 54 சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து, சுற்றுலா வழிகாட்டிகளுக்கான நெறிமுறைகள் பதிவுத் திட்டம் 2023 மற்றும் சுற்றுலா சேவை வழங்குபவர்களுக்கு பதிவுகள் மேற்கொள்வதற்கான திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

தொடர்ந்து 'வாவ் தமிழ்நாடு' போட்டியில் வென்ற 24 பேருக்கு அமைச்சர்கள் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கினர்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் இ.கமலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# உணவுப் பொருள்களை பொட்டலமிட செய்தித்தாள் பயன்படுத்த வேண்டாம்

## எஃப்எஸ்எஸ்ஏஐ அறிவுறுத்தல்

**புது தில்லி, செப். 28:** உணவுப் பொருள்களை பொட்டலமிடுவதற்கும், சாப்பிட விநியோகிப்பதற்கும், சேமித்துவைப்பதற்கும் செய்தித்தாளை பயன்படுத்த வேண்டாம் என்று உணவு வியாபாரிகள் மற்றும் நுகர்வோருக்கு இந்திய உணவு பாதுகாப்பு, தரக் கட்டுப்பாட்டு ஆணையம் (எஃப்எஸ்எஸ்ஏஐ) அறிவுறுத்தியுள்ளது.

செய்தித்தாள்களில் உள்ள ரசாயனங்கள், உணவில் கலந்து, உடல்நலனுக்கு கேடு விளைவிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

'உணவு பாதுகாப்பு, தரக் கட்டுப்பாடு (பேக்கேஜிங்) ஒழுங்குமுறைகள்-2018'இன்படி, உணவுப் பொருள்களை பொட்டலமிட செய்தித்தாள்கள் அல்லது அச்சடிக்கப்பட்ட இதர காகிதங்களைப் பயன்படுத்த தடை உள்ளது. எனினும், செய்தித்தாளில் உணவுப் பொருள்களை பொட்டலமிடுவது தொடர்ந்து வருகிறது.

இந்நிலையில், மேற்கண்ட விதிகளின் தீவிர அமலாக்கம் மற்றும் கண்காணிப்பு குறித்து மாநில உணவுத் துறை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றி வருவதாக, எஃப்எஸ்எஸ்ஏஐ தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஆணையத்தின் தலைமை செயல் அதிகாரி ஜி.கமல வர்தன ராவ் கூறுகையில், 'உணவுப் பொருள்களை பொட்டலமிட, விநியோகிக்க, சேமித்துவைக்க செய்தித்தாளை பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்துமாறு, உணவு வியாபாரிகளுக்கும் நுகர்வோருக்கும் அறிவுறுத்துகிறேன். செய்தித்தாளில் பயன்படுத்தப்படும் மை, உணவில் கலந்து உடலுக்குள் சென்றால், அது உடல்நலனுக்கு தீங்கு விளைவிக்கும். நோய்க்கிருமிகள் பரவவும் வாய்ப்புள்ளது. எனவே, நுகர்வோரின் நலன் கருதி, உணவுப் பொருள்களை பொட்டலமிட பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளை வியாபாரிகள் கடைப்பிடிக்க வேண்டும்' என்றார்.



# 1 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம்

## பதக்க அறுவடையை தொடரும் இந்தியா

ஹாங்ஸு, செப். 28: ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் 6–ஆவது நாளான வியாழக்கிழமை இந்தியாவுக்கு துப்பாக்கி சுடுதலில் தங்கமும், வுஷுவில் வெள்ளியும், குதிரையேற்றத்தில் வெண்கலமும் கிடைத்தன. போட்டியில் தினமும் பதக்கங்களை அறுவடை செய்துவரும் இந்தியா, அதன் எண்ணிக்கையை 25–ஆக அதிகரித்துக்கொண்டது. மறுபுறம், போட்டியை நடத்தும் சீனா இதர நாடுகள் எட்டிப் பிடிக்க முடியாத வகையில் 166 பதக்கங்களை குவித்திருக்கிறது.

### துப்பாக்கி சுடுதல்

### ஆடவர் அணிக்கு தங்கம்

10 மீட்டர் ஏர் பிஸ்டல் ஆடவர் அணிகள் பிரிவில் இந்தியாவின் சிவா நர்வால், அர்ஜுன் சிங் சீமா, சரப்ஜோத் சிங் கூட்டணி 1,734 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து தங்கம் வென்றது. சீனா (1,733), வியத்நாம் (1,730) முறையே அடுத்த இரு பதக்கங்கள் பெற்றன.

அதிலேயே தனிநபர் பிரிவில் சரப்ஜோத் சிங் 4–ஆம் இடமும், அர்ஜுன் சிங் 8–ஆம் இடமும் பிடித்தனர்.

ஸ்கீட் கலப்பு அணிகள் பிரிவில் அனந்த் ஜீத் சிங், கனிமத் செகான் கூட்டணி தகுதிச்சுற்றில் 7–ஆம் இடம் பிடித்து வெளியேறியது. இத்துடன், துப்பாக்கி சுடுதலில் மட்டும் இந்தியாவுக்கு 4 தங்கம், 4 வெள்ளி, 5 வெண்கலம் என 13 பதக்கங்கள் கிடைத்துள்ளன.

### டேபிள் டென்னிஸ்

### மனிகா, சரத், சத்தியன் முன்னேற்றம்

மகளிர் ஒற்றையர் 2–ஆவது சுற்றில் மனிகா பத்ரா 4–0 என நேபாளத்தின் நபிதா ஷ்ரேஷ்டாவை சாய்த்தார். ஸ்ரீஜா அகுலா 0–4 என வட கொரியாவின் சாங் யோங் பியோனிடம் வெற்றியை இழந்தார். ஆடவர் ஒற்றையரில் ...

நாமின் கோக் திரான் மாய்/காகுயென் தி ஜோடியை சாய்த்தது. சுதிர்தா முகர்ஜி/அஹிகா முகர்ஜி ஜோடி 3–0 என கஜகஸ்தானின் ஜெனரேஷ் அகாஷேவா/அனஸ்தாசியா லாவரோவா இணையை வீழ்த்தியது.

### வுஷு

### வெள்ளியை அர்ப்பணித்த ரோஷிபினா

மகளிருக்கான 60 கிலோ சண்டை பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் ரோஷிபினா தேவி – சீனாவின் ஜியாவெய் வுவிடம் வெற்றியை இழந்து (0–2) வெள்ளிப் பதக்கம் பெற்றார். கடந்த 2018 எடிஷனில் வெண்கலப் பதக்கம் வென்ற அவர், ஒருபடி முன்னேற்றம் கண்டிருக்கிறார்.

மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த ரோஷிபினா தேவி, வெற்றிக்குப் பிறகு பேசியபோது தனது இந்த வெள்ளிப் பதக்கத்தை மாநிலத்தில் அமைதி திரும்புவதற்காகவும், அங்கு இன்னல்களை அனுபவிப்போருக்காகவும், மக்களுக்கு பாதுகாப்பாக இருப்போருக்காகவும் அர்ப்பணிப்பதாகத் தெரிவித்தார்.

### குதிரையேற்றம்

### வெண்கலம் பெற்ற அனுஷ் அகர்வல்லா

டிரெஸ்ஸேஜ் தனிநபர் பிரிவில் இந்தியாவின் அனுஷ் அகர்வல்லா 73.030 புள்ளிகளுடன் 3–ஆம் இடம் பிடித்து வெண்கலப் பதக்கம் பெற்றார். மலேசியாவின் பின் அகமது ஃபதில் தங்கமும் (75.780), ஹாங்காங்கின் ஜாக்குலின் விங் யிங் சியு (73.450) வெள்ளியும் வென்றனர். குதிரையேற்றத்தில் இந்தியாவுக்கு இது 2–ஆவது பதக்கமாகும். முன்னதாக இதே டிரெஸ்ஸேஜின் அணிகள் பிரிவில் அனுஷ் உள்பட 4 பேர் அணி தங்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

### ஹாக்கி

EVA STALIN